


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 04 | Issue: 066 | 4 Pages | 05.10.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 066 | 4 பக்கங்கள் | 05.10.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று**

**விளக்கம்:**
**ஒருவன் அறநெறியில் நிற்காமல் அறமில்லாதவைகளைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது**

## இந்தியா கென்யா கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி நிறைவு..!



நைரோபி, அக். 6

கென்யா கடற்படையுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற இந்திய கடற்படையின் 'ஐஎன்எஸ் தர்காஷ்' போர்க்கப்பல், தனது மொம்பாசா துறைமுகப் பயணத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டது.

இந்திய கடற்படைக்கு சொந்தமான அதிநவீன ஏவுகணை போர்க்கப்பல் 'ஐஎன்எஸ் தர்காஷ்'. இந்த கப்பல் ஆப்பிரிக்க நாடுகளுடனான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு கடல்சார் பயணங்களை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கென்யா நாட்டில்உள்ளமொம்பாசாதுறைமுகத்திற்குஐஎன்எஸ்தர்காஷ்போர்க்கப்பல் 4 நாள் நல்லெண்ணப் பயணமாக சென்றது.

துறைமுகத்தை சென்றடைந்த இந்திய போர்க்கப்பலுக்கு கென்ய கடற்படை அதிகாரிகள்மற்றும்அங்குவாழும்இந்தியவம்சாவளியினர்உற்சாகவரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து, கப்பலில் சிறப்பு வரவேற்பு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இதில் கென்யாவுக்கான இந்திய தூதர் மற்றும் கென்ய கடற்படையின் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். இந்த பயணத்தின் போது, இரு நாட்டு கடற்படை வீரர்களும் கடல்சார் பாதுகாப்பு, தொழில்நுட்பங்கள் மற்றும் தங்களின் செயல்பாட்டு அனுபவங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டனர். மேலும், மொம்பாசா பகுதியில் உள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் இந்திய போர்க்கப்பலை நேரில் பார்வையிடவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தனது 4 நாள் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட 'ஐஎன்எஸ் தர்காஷ்' போர்க்கப்பல், இந்தியப் பெருங்கடல் பகுதியில் கென்ய கடற்படை கப்பலான 'ஜசிரி'யுடன் இணைந்து பல்வேறு கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டது. அதன்பின் மொம்பாசா துறைமுகத்தில் இருந்து புறப்பட்டது.

இந்தியப்பெருங்கடல்பிராந்தியத்தில்கடல்சார்பாதுகாப்பைமேம்படுத்தவும், இரு நாட்டு ராணுவ உறவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் இந்த பயணம் பெரிதும் உதவியாக இருக்கும் என பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## விமானம் பறந்து கொண்டிருக்கும்போது துணை விமானி செய்த அதிர்ச்சி செயல்...ஸ்மித் மச்சார் கூறிய பரபரப்பு தகவல்

துபாய், அக். 6

துணை விமானியின் தாக்குதலில் கண்பார்வை மங்கியது, முழு பலத்தையும் திரட்டி விமானி அறை கதவை திறந்தேன் என ஸ்மித் மச்சார் கூறியுள்ளார்.

துபாயில் இருந்து 174 பயணிகளுடன் இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கு பிளைதுபாய் நிறுவனத்தின் விமானம் ஒன்று கடந்த 30ந்தேதி சென்று கொண்டிருந்தது. விமானம் நடுவானில் சென்று கொண்டிருந்தபோது, அதன் விமானியான இந்தியாவை சேர்ந்த ஸ்மித் மச்சாரை துணை விமானி கத்தியால் குத்தியதாக தெரிகிறது.

அத்துடன் விமானத்தையும் தரையில் மோதி தகர்க்க முயன்றார். இதனால் விமானம் 34 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து 17 ஆயிரம் அடிக்கு மேல் கீழே வந்தது.

எனினும் ரத்த வெள்ளத்தில் போராடிய விமானி ஸ்மித் மச்சார், காக்பிட்டை (விமானி அறை) திறந்து பயணிகளை உள்ளே வரவைத்து துணை விமானியை கட்டுப்படுத்தச் செய்தார். பின்னர் பயணிகள் உதவியுடன் விமானத் தையும் சவுதி அரேபியாவின் தபூக் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கச்செய்தார்.

இதனால் பயணிகள் உள்பட விமானத்தில் இருந்த 182 பேரும் உயிர் தப்பி னர். துணை விமானியின் தாக்குதலில் காயமடைந்த ஸ்மித் மச்சார். அபுதா பியில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருடன் நேற்று முன்தினம் பிரதமர் மோடி செல்போனில் வீடியோ கால் மூலம் பேசி, விமானத்தையும் பயணிகளையும் பாதுகாத்ததற்காக பாராட்டு தெரிவித்தார். இந்தசெயலால் தேசமே பெருமை கொள்வதாக புகழ்ந்தார்.

மேலும் இந்த பயங்கரத்தை அரங்கேற்றிய துணை விமானியை சவுதி அரேபியா அதிகாரிகள் கைது செய்து, அமீரக அரசிடம் ஒப்படைத்தனர்.

உலகை உலுக்கிய இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த அமீரக அரசு சிறப்பு புலனாய்வுக்குழு ஒன்றை அமைத்தது. அந்தக்குழுவினர் கைது செய்யப்பட்ட துணை விமானியிடம் விசாரணையை தொடங்கி உள்ளனர். இதில் பல்வேறு தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்திய விமானி சுமித் சுமித் மச்சாருடன் தொலைபேசியில் உரையாடிய இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, விமானி அறைக்குள் நடந்த சம்பவம் பற்றி கேட்டார். அப்போது அவரிடம் ஸ்மித் மச்சார் கூறியதாவது:

துணை விமானி என்னிடம் பிரார்த்தனை செய்ய நேரம் கேட்டார். அங்குள்ள உள்ளூர் மக்கள் பலர் பிரார்த்தனை செய்வது வழக்கம். அது ஒன்றும் அசாதாரணமானதல்ல. அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, மரியாதை நிமித்தமாக நான் பின்னால் பார்க்காமல் முன்புறமாகவே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சுமார் 4 அல்லது 5 நிமிடங்களுக்குப் பிறகு திடீரென்று என் தலையின் பின்புறத்தில் பலமான அடி விழுந்தது. முதலில் விமானத்திற்கு ஏதோ பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது என்றே நினைத்தேன். ஆனால், அடுத்தடுத்து தாக்குதல்கள் தொடர்ந்தன. அப்போதுதான் விமானத்தில் எந்த பிரச்சினையும் இல்லை. துணை விமானிதான் என்னை தாக்குகிறார் என்பதை உணர்ந்தேன். துணை விமானியை தடுக்கவும் எதிர்த்து போராடவும் முயன்றேன். ஆனால் ஆரம்பக்கட்ட தாக்குதல்களால் எனது பார்வை மங்கலாகி கிட்டத்தட்ட எதுவும் தெரியாத நிலை ஏற்பட்டது. நான் விமானத்தின் தரையில் கீழே விழுந்து கிடந்தேன். அந்தச் சமயத்தில் விமானம் செங்குத்தாகக் கீழே இறங்கிக்கொண்டிருக்கிறது என்பதுதான் எனக்கு தோன்றிய அடுத்த எண்ணம் மற்றும் உணர்வாக இருந்தது.

கதவை திறக்காவிட்டால் இறந்து விடுவோம் என்ற எண்ணம் எனக்குள் இருந்தது.அதைத்தனிப்பட்டவிஷயமாகவோஅல்லதுமக்களுக்கானதாகவோ எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். அதுவே எனக்குள் எஞ்சியிருந்த கடைசிப் போராட்ட உணர்வை தூண்டியது.

அப்போதுதான் நான் முழு பலத்தையும் திரட்டிப் போராடினேன். என்னிடம் இருந்த முழு ஆற்றலையும் திரட்டி கதவை நோக்கிச் சென்று அதை திறந்தேன். கதவைத் திறப்பதற்கு ஒரே வழி அதன் கைப்பிடியை அடைவதுதான். அது ஒரு சிறிய, விரைவான திருப்பம் தேவைப்படும் செயல், கைப்பிடியின் மீது என் கைகள் பட்டதும் அதைத் திருப்பி திறந்தேன். நல்ல வேளையாக பயணிகள் விரைந்து வந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இவ்வாறு சுமித் மச்சார் கூறினார்.

# தி.மு.க.-அ.தி.மு.க. மறைமுக கூட்டணி: தாராபுரம் 'ரோடு ஷோ'வில் முதல்அமைச்சர் விஜய் பேச்சு

தாராபுரம், அக். 5

தாராபுரத்தில் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதல் அமைச்சர் விஜய் 'ரோடு ஷோ'வில் ஈடுபட்டு வருகிறார்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) நடைபெறுகிறது. இதில் த.வெ.க.. தி.மு.க., அ.தி.மு.க.. நாம் தமிழர் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என 5 முனை போட்டி நிலவுகிறது.

அரசியல் கட்சி வேட்பாளர்கள், சுயேச்சைகள் என மொத்தம் 22 பேர் களத்தில் உள்ளனர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தாராபுரம் தொகுதி முழுவதும் இரவு, பகலாக சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசாரம் செய்து வாக்கு சேகரித்து வருகின்றனர். மேலும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக, அந்தந்த கட்சிகளின் தலைவர்கள், கூட்டணி கட்சி தலைவர்கள் தாராபுரத்தில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், தாராபுரத்தில் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதல்அமைச்சர் விஜய் இன்று 'ரோடு ஷோ'வில் ஈடுபட்டு வருகிறார். தாராபுரம் மாருதி நகரில் இருந்து பிரசார வேனில் முதல்அமைச்சர் விஜய் ரோடு ஷோவில் ஈடுபட்டு வருகிறார். பிரசார வாகனத்தில் தவெக வேட்பாளர் சத்தியபாமாவும் உடன் செல்லும் நிலையில் அவருக்கு ஆதரவு கேட்டு முதல்அமைச்சர் விஜய் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். முதல்அமைச்சர் விஜய் பிரசாரத்தை காண வழியெங்கும் ஆயிரக்கணக்கான த.வெ.க. கட்சி தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் திரண்டுள்ளனர். முதல்அமைச்சரின் வருகையையொட்டி தாராபுரம் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.



ரோடு ஷோவின்போது தாராபுரம் மூலனூரில்முதல்அமைச்சர்விஜய்க்கு விவசாயிகள் முருங்கைக்காய்களைப் பரிசாகவழங்கினர்.பின்னர்முருங்கை மரத்தில் இருந்து முருங்கைக்காயைப் பறித்து, முதல்அமைச்சர் விஜய் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பின்னர்காங்கேயம்காளைகள்முன் நின்று முதல்அமைச்சர் விஜய் புகைப்படம் எடுத்துக்கொண்டார். தொடர்ந்து மாட்டு வண்டியில் முதல் அமைச்சர் விஜய் பரப்புரை மேற்கொண்டார்.

தொடர்ந்து மூலனூர் அருகேயுள்ள வஞ்சியம்மன் கோயிலில் முதல் அமைச்சர் விஜய் வழிபாடு செய்தார். இதனிடையே முதல் அமைச்சர் விஜய் அவரது தங்கையுடன் இருக்கும் புகைப்படத்தை தொண்டர் ஒருவர் பரிசாக வழங்கினார்.

தாராபுரம் பரப்புரையின்போது வண்டியில் இருந்து இறங்கி சாலையில் நடந்து சென்று முதல்அமைச்சர் விஜய் வாக்கு சேகரித்தார்.

இந்நிலையில்தாராபுரம்ரோடு ஷோவில் பேசிய முதல்அமைச்சர் விஜய், "தி.மு.க.வோடுகைகோர்க்கக் கூடாது என எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா மேடம் இருவரும் ரொம்ப கவனமாக இருந்தார்கள். ஆனால் இன்று என்ன நடக்கிறது?. இந்த மற்றும் பலரும், தி.மு.க.வும் மறைமுகமாக, யாரோடு எல்லாம் கூட்டுச்சேரக்கூடாதோ அவர்களுடன் சேர்ந்து இப்படியெல்லாம் செய்கிறார்கள். வாக்காளர்கள் அனைவரும் த.வெ.க.விற்கு வாக்களிக்க வேண்டும்" என்று கூறினார்.

## TUPF தொழிற்சங்க பாதுகாப்பு கூட்டமைப்பு விசில் சின்னத்தில் வாக்கு சேகரிப்பு

மதுராந்தகம் அக்.5

மதுராந்தகம் தனி சட்டமன்ற இடைத்தேர்தல் விசில் சின்னத்தில் போட்டியிடும் மரகதம் குமரவேலுவை ஆதரித்து TUPF தொழிற்சங்க பாதுகாப்பு கூட்டமைப்பினர் மதுராந்தகம் பஜார் பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். அப்போதுநலவாரியத்தில்ஓய்வூதியம் பெறும் தொழிலாளர்களுக்கு ரூபாய் 3000 உயர்த்தி வழங்கவும் இ எஸ் ஐ திட்டத்தை அமல்படுத்தவும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தனித் துறை உருவாக்கவும் தமிழக




முதலமைச்சர்ஜோசப்விஜய்கவனத்திற்கு கொண்டு சென்று கோரிக்கையை நிறைவேற்றப்படும் என உறுதி அளித்துள்ளார் என தவெககட்சிசாதனைகளை எடுத்துக்கூறி விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்நிகழ்வின் போது நிறுவனத் தலைவர் ஆர்.டி.பழனி மாநிலத் தலைவர் ஆ. கதிர்வேல் மாநில கௌரவ தலைவர் வி.ஜெ.குமார் பொதுச்செயலாளர் கே.ஆர்.சீனிவாசன் மாநில பொருளாளர் கே செல்வம் கதிர்வேல் உள்ளிட்டர் பங்கு பெற்றனர்.

## புதுவாயல் ஆரணி இடையே நெடுஞ்சாலைதுறைக்கு சொந்தமான மரம் பெட்ரோல் பங்க் அமைப்பதற்காக வெட்டி சாய்ப்பு நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பேரம்

திருவள்ளூர் மாவட்டம் ஆரணி அடுத்த கொள்ளுமேடு பகுதியில் புதுவாயலிருந்து பெரியபாளையம் செல்லக்கூடிய முக்கிய நெடுஞ்சாலையில் இருந்த பெரிய மரம் தனியார் பெட்ரோல் பங்க் அமைப்பதற்காக சட்டத்திற்கு புறம்பாக வெட்டப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது, குறிப்பாக சில நாட்களுக்கு முன்பு மின்சாரம் எடுத்து செல்வதாக கூறி கிளைகளைக் கழித்த நிலையில் அதை பயன்படுத்திக் கொண்டு பெட்ரோல் பங்க் உரிமையாளர் மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் கைகோர்த்துக்கொண்டு சட்டத்திற்கு புறம்பாக முதலில் மேல் பகுதி உள்ள மரத்தை வெட்டி சாய்த்தனர், அப்பொழுதே

இதுகுறித்து சாலை ஆய்வாளர் வேலு மற்றும் ரெக்கார்டு கிளர்க் ஜெயராஜ் ஆகியோர் சம்பவ இடத்தில் ஆய்வு மேற்கொண்டனர்., மேலும் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறிய நிலையில், பத்து தினங்களுக்குப் பின்பு மரத்தை அடியுடன் வெட்டி சாய்த்து உள்ளனர் அரசுக்கு வருவாய் ஏற்படுவதை தடுக்கும் நிலையில் தனியார் கைகோர்த்துக்கொண்டு சாலை ஓரம் இருந்த நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான மரத்தை அடியோடு வெட்டி சாய்த்து உள்ள சம்பவம் அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது,



நெடுஞ்சாலை துறை அதிகாரி..

மேலும் இது தொடர்பாக தகவல் அளித்த செய்தியாளர்களுடன் பேரம் பேசும் ஆடியோவும் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது, அந்த ஆடியோவில்

இதை பெரிது படுத்த வேண்டாம் உங்களுக்கு தேவையானதை பெட்ரோல் பங்க் உரிமையாளரிடம் கூறி செய்ய சொல்கிறோம் என்று நெடுஞ்சாலை துறை அதிகாரியே கூறுவது வேடிக்கையாக உள்ளது, குறிப்பாக தமிழக வெற்றி கழகம் புதியதாக பொறுப்பேற்ற பின் லஞ்சம் ஊழலை ஒழித்து வருகிறோம்எனகூறும்நிலையில்கும்மிடிப்பூண்டி

நெடுஞ்சாலை துறைக்கு சம்பந்தமான சாலை ஓரமரங்கள் வெட்டி சாய்ப்பது மட்டுமில்லாமல் அதற்கு பேரம் பேசுவது எந்த விதத்தில் நியாயம் என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர், மேலும்இதுதொடர்பாகசம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை எழுந்துள்ளது.

## நாடு சிரிக்கும் நான்கு மாதங்கள்! இந்த நான்கு கேள்விகளுக்கு பதிலுண்டா...? மு.க. ஸ்டாலின் பதிவு



சென்னை அக்.5

நாடு சிரிக்கும் நான்கு மாதங்கள்! இந்த நான்கு கேள்விகளுக்கு பதிலுண்டா...? என மு.க. ஸ்டாலின் பதிவிட்டு உள்ளார்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி), செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் (தனி) ஆகிய இரு சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) நடைபெறுகிறது. இதில் த.வெ.க., தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என 5 முனை போட்டி நிலவுகிறது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களுடைய தொகுதி முழுவதும் இரவு, பகலாக சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகின்றனர். மேலும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக, அந்தந்த கட்சிகளின் தலைவர்கள், கூட்டணி கட்சி தலைவர்கள் தாராபுரத்தில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், நான்கு கேள்விகளுக்கு பதிலுண்டா...? என எக்ஸ் தளத்தில் பதிவிட்டு உள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில்,

1. பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியோரைச் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் மாவட்டச் செயலாளர்களாகவும் வைத்துக்கொண்டு முதலமைச்சர் பெண் பாதுகாவலர் போல வேடம் போடலாமா?

2. அறிவிக்கப்படாத மின்வெட்டில் இருந்து, இனி தினமும் அறிவித்துவிட்டு 8 மணிநேரம் மின்வெட்டு என்பதை நோக்கித் தமிழ்நாடு நகரவுள்ளதாகவரும்செய்திகள்உங்கள்செவிகளை எட்டவில்லையா?

3. அசையாத மரமொன்று விழுந்தது கீழே என்ற கதையாக, இடைத்தேர்தல் தோல்வியைத் தவிர்க்க நீங்கள் மணிக்கணக்கில் தெருவலம் போவது போதாமல், டிபன் கேரியரில் பணமும் போகிறதாமே? ஒரு தெருவுக்கு இவ்வளவு என வாக்குகள் விலைபேசப்படுவதாக உங்கள் ஆட்சி அமைய ஆதரவு தெரிவித்த கட்சிகளே குற்றம்சாட்டுவதற்குப் பதில் என்ன?

4. இத்தோடு, குதிரைவேக குதிரை பேரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? அல்லது, இனியும் TVK Horse Tradingஇன் அடுத்த Season தொடருமா?

தூயசக்தி என தம்பட்டம் அடித்த உங்களது ரீல் இப்படி நான்கே மாதங்களில் அறுந்து தொங்கிவிட்டதே! என பதிவிட்டு உள்ளார்.

## ஆட்டோ ஓட்டுநர்களின் குரல், ஆட்சியாளர்களின் செவிகளுக்கு எட்டவில்லையா? வேல்முருகன் கேள்வி



சென்னை, அக். 5

வாழ்வாதாரம் கேட்டுப் போராடும் ஆட்டோ ஓட்டுநர்களின் குரல், ஆட்சியாளர்களின் செவிகளுக்கு எட்டவில்லையா? என வேல்முருகன் கேள்வி எழுப்பி உள்ளார்.

இது தொடர்பாக, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை வியாசர்பாடி சர்மா நகர் பகுதியைச் சேர்ந்த ஆட்டோஓட்டுநர்முகமது இப்ராகிம், தனது ஆட்டோவின் தகுதிச்சான்றிதழ் (FC) புதுப்பிப்பதற்காகப்பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது.

ஓர் உழைப்பாளி தனது தொழிலைத் தொடர்ந்து நடத்துவதற்காகவே கடன் பெற வேண்டிய அவல நிலை நிலவுகிறது. ஆனால், அந்தக் கடனை அடைப்பதற்கான வருவாய்தொழிலில்கிடைப்பதில்லை. மறுபுறம், வாகனத் தகுதிச் சான்று (FC), காப்பீடு, வாகனப் பராமரிப்பு, எரிபொருள் உள்ளிட்ட செலவுகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன.

குறிப்பாக, பன்னாட்டு கார்ப்பரேட் மற்றும் அந்நிய நிறுவனங்களின் செயலி வழி (Online Aggregators) போக்குவரத்து ஆதிக்கத்தால் ஆட்டோ ஓட்டுநர்களின் தினசரி வருமானம் கடுமையாகச் சரிந்துள்ளது. உள்ளூர் தொழிலாளர்களின் உழைப்பையும் வாழ்வாதாரத்தையும் இந்த அந்நிய நிறுவனங்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி உறிஞ்சிச் சுரண்டுகின்றன. இத்தகைய ஆன்லைன் நிறுவனங்களின் தீவிரப் போட்டியாலும் கட்டணச் சுரண்டலாலும் எளிய ஆட்டோ ஓட்டுநர்கள் அன்றாடப் பிழைப்பிற்கே வழியின்றித் தத்தளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

உழைப்பின் மூலம் கிடைக்கும் வருவாய்க்கும், வாழ்க்கை மற்றும் தொழில் சார்ந்த செலவுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்தச் சமநிலையின்மைக்கு யார் பொறுப்பு? ஆட்டோ ஓட்டுநர்கள் நகரங்களின் அன்றாடப் போக்குவரத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றனர். ஆனால், அவர்களின் உழைப்புக்குரிய பொருளாதாரப் பாதுகாப்பை உருவாக்குவதற்குப் பதிலாக, பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலும் தொழிலைத் தொடர்வதற்கான கடன் சுமைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன.

இது முகமது இப்ராகிம் என்றஒருவரின்குடும்பத்தை மட்டும் பாதிக்கும் தனிப்பட்ட பிரச்சினை அல்ல. தமிழ்நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான ஆட்டோ ஓட்டுநர்களின்வாழ்வாதாரத்தைப்பாதிக்கும்அடிப்படைப் பொருளாதாரச் சிக்கல். ஓர் ஆட்டோ ஓட்டுநர் தனது வாகனத்தைப் புதுப்பித்துச் சாலையில் இயக்குவதற்கே கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால், அந்தத் தொழிலாளியின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் அரசின் கொள்கைகள் எங்கே போயின?

பன்னாட்டுச்செயலிநிறுவனங்களைமுறைப்படுத்தவும், உள்ளூர் ஆட்டோ ஓட்டுநர்களின் நலனைக் காக்கவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? அரசு இன்னும் எத்தனை உயிரிழப்புகளுக்காகக் காத்திருக்கிறது? முகமது இப்ராகிமின் உயிரிழப்பு வெறும் இரங்கல் செய்தியுடன் கடந்து செல்லக்கூடிய ஒன்றல்ல. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து தமிழக அரசு ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதார நெருக்கடி குறித்து அவசரமாக ஆய்வு செய்து, பன்னாட்டு நிறுவனங்களின்

அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தி, ஓட்டுநர்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் நிரந்தரக் கொள்கையை வகுக்க வேண்டும்.

முகமதுஇப்ராகிம்குடும்பத்திற்குஉடனடிநிவாரணமும், அக்குடும்பத்தின் எதிர்கால வாழ்வாதாரத்திற்கான உரிய பாதுகாப்பும்வழங்கப்படவேண்டும். அந்நியப்பன்னாட்டு ஆன்லைன் நிறுவனங்களின் கட்டணச் சுரண்டலை முறைப்படுத்தி, தமிழக அரசே பிரத்யேகமாக ஆட்டோக்களுக்கான அரசு செயலியைத் திறம்படச் செயல்படுத்த வேண்டும்.

ஆட்டோ ஓட்டுநர் சங்கங்களின் பிரதிநிதிகளைத் தமிழக அரசு உடனடியாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வு காண வேண்டும்.

இன்னும் எத்தனை உயிர்கள் பலியாக வேண்டும்? ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க தமிழக அரசு உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றுதமிழகவாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தந்தையின் இறுதிச்சடங்கிற்குக்கூட பணமின்றி தவித்த மாணவன்; கைகொடுத்த கிராம மக்கள்



கள்ளக்குறிச்சி, அக். 5

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே பெற்றோர் இருவரையும் இழந்து, இறுதிச்சடங்கு கூட செய்ய பணமின்றி தவித்த 15 வயது பள்ளி மாணவனின் வாழ்வாதாரத்திற்கும், உயர் கல்விக்கும் தமிழக அரசு உதவ வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள எஸ்.குளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் நடராஜன் (வயது 48). இவரது மனைவி முனியம்மாள். இந்த தம்பதியினருக்கு மோகன்ராஜ் என்ற மகன் உள்ளார். கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு உடல்நலக் குறைவால் முனியம்மாள் உயிரிழந்தார்.

மனைவியின் மறைவுக்கு பிறகு, நடராஜன் வேறு திருமணம் செய்து கொள்ளாமல் தனது ஒரே மகனான மோகன்ராஜைவளர்த்து ஆளாக்கிவந்தார். இந்தநிலையில், கடந்த சில தினங்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நடராஜனும் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

தாய் ஏற்கனவே மறைந்த நிலையில், தற்போது தந்தையையும் இழந்ததால் 15 வயதான சிறுவன் மோகன்ராஜ் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டான். தந்தையின் உடலுக்கு இறுதிச் சடங்குகளை நடத்துவதற்கு கூட அவரிடம் போதிய பணம் இல்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்த சிறுவனின் பரிதாப நிலையை கண்டு கிராம மக்கள் கண்ணீர் விட்டனர்.

இதையடுத்து, கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களுக்குள் பணம் திரட்டி, நடராஜனின் இறுதிச் சடங்குகளை முறைப்படி நடத்தி உடலை அடக்கம் செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. மோகன்ராஜ் தற்போது 11ம் வகுப்பு படித்து வருகிறான்.

இதுதொடர்பாக சிறுவன் மோகன்ராஜ் கூறும்போது, "எனக்கு உறவினர்கள் என்று யாரும் ஆதரவாக இல்லை. தந்தை மறைவுக்கு பிறகு உணவு, கல்வி உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்கே தினசரி சிரமப்பட்டு வருகிறேன். நான் தொடர்ந்து படிக்கவும், எனது எதிர்கால வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் தமிழக அரசும், கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகமும் உரிய உதவிகளை வழங்க வேண்டும்" என உருக்கமுடன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தாய், தந்தையை இழந்து தவிக்கும் இந்த மாணவனுக்கு அரசு காப்பக வசதி, மாதாந்திர உதவித்தொகை மற்றும் உயர் கல்விக்கான முழு உதவிகள் கிடைக்க மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்களும் வலியுறுத்தியுள்ளனர்.

## காலை உணவு திட்ட கண்காணிப்பு: காலை 7 மணிக்கு பணிக்கு வர உத்தரவு; ஆசிரியர்கள் எதிர்ப்பு



திருவள்ளூர், அக். 5

காலை உணவு திட்டக்கண்காணிப்புக்கு ஆசிரியர்கள் காலை 7 மணிக்கே பள்ளிக்கு வர வேண்டும் என்ற உத்தரவுக்கு ஆசிரியர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

முதல்அமைச்சரின் காலை உ ண வு த் தி ட் ட த் தை க் க ண் கா ணி க் க ஆசிரியர்கள் காலை 7 மணிக்கே பள்ளிக்கு வருகை கர வேண்டும் என்ற அறிவிப்பைத் தமிழக அரசு உடனடி கத் திரும்பப் பெற வேண் டும் என்று தமிழ்நாடு அரசுஊழியர்கள்ஆசிரியர்கள்நலகூட்டமைப்புவலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைவர் சா. அருணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது: மாணவர்களின் ஏழ்மை நிலையைக்கருத்தில் கொண்டு இந்த அறிவிப்பைத் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தொடங்கப்பட்ட காலை உணவு திட்டம் தற்போது ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை நீட்டிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22 ஆம் தேதியன்று தமிழ்நாடு முதல்அமைச்சரால் தொடங்கி வைக் கப்பட்டுள்ளது. இந்நிலையில், காலை உணவுத்திட்டத்தை நாள்தோறும் கண்காணிக்கப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் காலையில் 7 மணிக்கே பள்ளிக்கு வரவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. பல ஆசிரியர்கள் 40 முதல் 30 கிலோமீட்டர் தொலைவில் இருந்து பணிக்கு வந்து கொண்டிருக்கும் நிலையில், காலை 7 மணிக்கே பள்ளிக்கு வருவது என்பது மிகவும் சிரமமான செயலாகும் என்று அறிவித்துள்ளனர்.

## மதுரை: பணம் இரட்டிப்பு மோசடி வழக்கில் கணவன் மனைவி மீது குண்டாஸ்




மதுரை, அக். 5

மேலூரை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்ற பணம் இரட்டிப்பு மோசடியில் கைது செய்யப்பட்ட ரஞ்சித் மற்றும் பிரியதர்ஷினி மீது குண்டர்சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் மேலூரில் எப்.கியூ.எல். (FQL) என்ற தனியார் நிதி நிறுவனம் செயல்பட்டு வந்தது. அந்த நிறுவனத்தின் செயலி மூலம் ஆன்லைனில் முதலீடு செய்தால், 2 மாதங்களில் பணம் இரட்டிப்பாகும் என்று கூறப்பட்டது. அதோடு பொதுமக்களிடம் இருந்து முதலீடு பெறுவதற்கு முகவர்களும் நியமிக்கப்பட்டனர்.

இந்த முகவர்கள், மதுரை, சிவகங்கை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் கிராம மக்களை குறிவைத்து, மூளைச்சலவை செய்து, நிதி நிறுவனத்தில் முதலீடு செய்ய வைத்தனர். அதோடு ஒரு சிலருக்கு. முதலீட்டு தொகை இரட்டிப்பாக கிடைத்தது. இதனால், ஆயிரக்கணக்கான மக்கள்தலா ரூ.50 ஆயிரம் முதல் ரூ.5 லட்சம் வரை முதலீடு செய்தனர்.

இந்தநிலையில், அந்த தனியார் நிறுவனம் திடீரென மூடப்பட்டது. இதனால், பணத்தை முதலீடு செய்த மக்கள், முகவர்களின் வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இதுமட்டுமின்றி பாதிக்கப்பட்ட மக்கள் மேலூரில் உள்ள திருச்சி தேசிய நெ டு ஞ் சா லை யி லு ம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து இந்த வழக்கு மதுரை பொருளாதார குற்றத்தடுப்புபிரிவுக்குமாற்றம்செய்யப்பட்டு, விசாரணை நடந்து வந்தது. இதற்கிடையே, மோசடி வழக்கில் மேலூர் அருகே உள்ள கட்டையம்பட்டி பகுதியைச் சேர்ந்த ரஞ்சித், பிரியதர்ஷினி ஆகிய தம்பதியினர் கடந்த மாதம் 7ந்தேதி திண்டுக்கல் மாவட்ட கோர்ட்டில் சரணடைந்தனர். இருவரும் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

45 நாட்களில் முதலீட்டுத் தொகையை இரட்டிப்பாக்கித்தருவதாக கூறி பண மோசடி செய்ததாக தென்மாவட்டங்களில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புகார் அளித்துள்ளதாக கூறப்படும்நிலையில் ரூ.1000 கோடி வரை மோசடி நடந்துள்ளதாக போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். இவ்வழக்கில் இதுவரை 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மதுரை மற்றும் மேலூரை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்ற பணம் இரட்டிப்பு மோசடியில் கைது செய்யப்பட்ட ரஞ்சித் மற்றும் பிரியதர்ஷினி ஆகியோர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நான் பெரிய அரசியல்வாதியின் வாரிசோ, மிகப் பெரிய சினிமா நட்சத்திரமோ கிடையாது எடப்பாடி பழனிசாமி



சென்னை, அக். 5

எனக்கு அதுக்கு மொழியில் பக்கம் பக்கமாக, ரசிகர்களை மயக்குற மாதிரி, போலி வசனங்கள் பேசத் தெரியாது என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். எளிய மனிதன்இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:நான் பெரிய அரசியல்வாதியின் வாரிசோ, மிகப் பெரிய சினிமா நட்சத்திரமோ கிடையாது. நான் உங்களில் ஒருவன். உங்க ஊருல, தெருவுல, வீட்டுல, நீங்க தினசரி சாதாரணமா பாக்குற அண்ணன், அப்பா, சித்தப்பா, பெரியப்பா மாதிரி, எளிய மனிதன், இந்த எடப்பாடி பழனிசாமி. எனக்கு நம்ம மக்கள் படுற கஷ்டம் தெரியும், நம்ம ஜனத்தோட அன்றாட வாழ்க்கை தெரியும், நம்மளோட பிரச்சனைகளை தெரியும். ஆனா எனக்கு அதுக்கு மொழியில் பக்கம் பக்கமாக, ரசிகர்களை மயக்குற மாதிரி, போலி வசனங்கள் பேசத் தெரியாது. எத்தனை சோதனைகள்ஏன்னா, நான் கீழ இருந்து வந்தவன். அதனாலதானோ என்னவோ, மற்ற எல்லா கட்சி தலைவர்களை விட, இந்த விவசாயி பழனிசாமிக்கு எதிரா, அத்தனை சூழ்ச்சிகள். எனக்கு பின்னால், 100 வருடத்திற்கு இந்த இயக்கம் இருக்கும்ணு சொன்ன, புரட்சி தலைவி அம்மாவின் சின்னம், இந்த இரட்டை இலை. இதை காப்பாத்த நினைச்சது நம்முடைய தவறா? இல்ல, உங்களை போல சாதாரண குடும்பத்தில் பிறந்தது என்னோட தவறா? புரட்சி தலைவரும், புரட்சித் தலைவியும், கட்டிக்காத்தஇந்தஇயக்கம், சுயநலவாதிகளின் சூழ்ச்சிக்கு பலியாக கூடாதுன்னு, இந்த நிமிடம் வரை நானும், தலைவரின் ரத்தத்தின் ரத்தங்களும், போராடிட்டு இருக்கிறோம். ஆனால்... அதற்கு எதிராக எத்தனை சோதனைகள்? எத்தனை சூழ்ச்சிகள்? எத்தனை துரோகங்கள் ? இந்த இயக்கத்தை சூறையாட எ த் த னை நாடகங்கள்? இன்று இந்த இரட்டை இலையை விமர்ச்சனம் செய்ய நினைக்கிற தமிழக வெற்றிக் கழகத்துக்கு கூட, நாம கரூர் விவகாரத்துல நல்லதுதானே நினைச்சோம்? நியாயம் கேட்கிறோம்அதான் நாம செய்த குற்றமா ? அதுக்கான பிரதிபலனாதான் நம்ம MLAக்களை பேரம்பேசி திருடிட்டு போக பாக்குறாங்களா? உயிரை கொடுத்து உழைத்த 6,000 கட்சி நிர்வாகிகளைப் பற்றியோ, இவங்களை நம்பி வெற்றிபெற வைத்த லட்சக்கணக்கான மக்களைப்

பத்தியோ ஒரு நிமிடம் யோசிச்சிருந்தாகூட, இப்படி செய்ய மனசு வந்துருக்குமா? அன்பு மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதி மக்களே, நாங்க நியாயம் கேட்கிறோம். அன்பு பெரியோர்களே, தாய்மார்களே, சகோதர சகோதரிகளே, உங்ககிட்ட நியாயம் கேட்கிறோம். புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி சார்பில் உங்களிடம் நியாயம் கேட்கிறோம். இதற்கானதீர்ப்பை நீங்களே கொடுங்க. நீங்க கொடுக்கப்போற தீர்ப்பு, இனி MLAக்களை, குதிரை பேரத்தில் விலை பேசும் த.வெ.கவுக்கும், விலை போக நினைச்ச துரோகிகளுக்கும், வாழ்நாள் பாடமாக, இந்த பச்சை துரோகத்துக்கு முற்றுப்புள்ளியாக இருக்கட்டும். எனவே, அக்.6 அன்று, #வாக்களிப்பீர்_இ ர ட் டை இ லை #வெல்லட்டும்_இரட்டைஇலைஇவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூடலூர்: கரும்புகளை ருசித்தபடி சாலையில் உலா வந்த யானை



கூடலூர், அக். 5

நீலகிரி மாவட்டம் கூடலூர் வனச்சரகத்திற்கு உட்பட்ட புத்தூர்வயல் மற்றும் விமலகிரி குடியிருப்புப் பகுதிகளில், அதிகாலை நேரத்தில் வனப்பகுதியை விட்டு வெளியேறிய ஒற்றைக் காட்டு யானை ஒன்று திடீரென ஊருக்குள் புகுந்தது.

குடியிருப்பு வீதிகளின் வழியே உலா வந்த அந்த யானை, அங்கிருந்த ஒரு வீட்டின் தோட்டத்திற்குள் நுழைந்தது. அங்கு செழிப்பாக வளர்க்கப்பட்டிருந்த கரும்புகளைதனது தும்பிக்கையால் வேரோடு பிடுங்கி எடுத்தது.

பிடுங்கிய கரும்புகளை வாயில் கவ்விக்கொண்டு, நட்டநடுச்சாலையில் மிகவும் நிதானமாக, அதனை சுவைத்துக்கொண்டே உலா வர தொடங்கியது. அதிகாலை நேரத்தில் நடைப்பயிற்சி மேற்கொண்ட பொதுமக்களும், அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகளும் சாலையில் கரும்புடன் கம்பீரமாக நடந்து வந்த யானையை பார்த்து அலறியடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இதுகுறித்து உள்ளூர் மக்கள் கொடுத்த தகவலின் பேரில், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கூடலூர் வனத்துறையினர், யானையை வனப்பகுதி விரட்டினர். தொடர்ந்து, வனப்பகுதியில் முகமிட்ட யானையை கும்கி யானைகள் உதவியுடன் முதுமலைக்கு விரட்டு பணியில் வன ஊழியர்கள் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் ஏற்பட்ட பெரும் பரபரப்பு முடிவுக்கு வந்தது.

## திருமண விவகாரத்தில் மன உளைச்சல்.. பட்டதாரி இளம்பெண் எடுத்த விபரீத முடிவு



திருவாரூர், அக். 5

திருவாரூரில் திருமண விவகாரம் தொடர்பாக பெற்றோருடன்ஏற்பட்டகருத்துவேறுபாட்டால்பட்டதாரி இளம்பெண் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

திருவாரூர் வடக்கு வீதியில் சைக்கிள் கடை நடத்தி வருபவர் குமார். இவர் தனது சைக்கிள் கடையின் மாடியில் மனைவி மற்றும் மகளுடன் வசித்து வருகிறார். ஒரு மகன் திருமணம் ஆகி தனி குடித்தனம் சென்றுள்ளார். குமாரின் மகள் ஸ்ரீலேகா (வயது 24). இவர், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு பட்டப்படிப்பு படித்துவிட்டு வீட்டில் இருந்து வந்தார்.

இந்த நிலையில் ஸ்ரீலேகா நேற்று காலை மாடியில் இருந்து கீழே இறங்கி சைக்கிள் கடையின் பின்புறம் உள்ள ஒரு அறையில் சைக்கிள் கடையில் வைத்திருந்த மண்எண்ணையை எடுத்து தலையில் ஊற்றிக் கொண்டு தனக்குத் தானே தீக்குளித்தார். தீயின் வேதனை தாங்காமல் அவர் சத்தம் போட்டு அலறினார். அவரது அலறல் சத்தம் கேட்டு மாடியில் இருந்து கீழே இறங்கி வந்த குமார், தனது மகளை காப்பாற்ற முயன்றார். இதில் அவருக்கும் பலத்த தீக்காயம்ஏற்பட்டது. ஸ்ரீலேகா சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

பலத்த தீக்காயம் அடைந்த குமார் திருவாரூர் அரசு ம ரு த் து வ க் க ல் லூ ரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். போலீசாரின் முதல்கட்ட விசாரணையில் தற்கொலை செய்துகொண்ட ஸ்ரீலேகாவுக்கு, மயிலாடுதுறையை சேர்ந்த ஒருவருடன் திருமண செய்ய முடிவு செய்யப்பட்டு நிச்சயதார்த்தமும் நடந்துள்ளது. பின்னர் சில காரணங்களால் ஸ்ரீலேகாவின் பெற்றோர், தனது மகளுக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்க முயன்றுள்ளனர்.

இதில் ஸ்ரீலேகாவிற்கும், அவரது பெற்றோருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் விரக்தியடைந்த ஸ்ரீலேகா தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

## பைக் ரேசில் ஈடுபட்டதாக இதுவரை 7 பேர் கைது சென்னை போலீசார்



சென்னை, அக்.5

நேற்று இரவு விதிகளை மீறி பைக் ரேஸில் ஈடுபட்டதாக இதுவரை 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சென்னை போலீசார் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் நேற்று நள்ளிரவு நுங்கம்பாக்கம், ஜெமினி, கோடம்பாக்கம், ஐஐடி மேம்பாலம் உள்ளிட்ட முக்கிய சாலைகளில் 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள், பைக்ரேஸில்ஈடுபட்டதாகக்கூறப்படுகிறது. அதிக சத்தம் எழுப்பியபடி பைக் சாகசங்களில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதற்கிடையே, கல்லூரி மாணவர் குகன்(21) பைக் ரேஸில் ஈடுபட்டு, ஐஐடி மேம்பாலத்தில் இருந்து விழுந்து உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் விபத்துக்குள்ளான பைக்கை, பின்னால் வந்தவர்கள் எடுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பி சென்றதாகவும் கூறப்படுகிறது. இதனால், விபத்து நடந்தபோது உடனிருந்தவர்கள் யார், பைக்கை ஓட்டி வந்தது யார் என்பது குறித்தும் போலீசார் விசாரித்து வருகின்றனர். மேலும், அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகள் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ள வீடியோக்களையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேலும் வள்ளுவர் கோட்டம் சிக்னல் அருகே மட்டும் 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்றாக திரண்டு பைக் சாகசங்களில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இந்தசூழலில் பைக் ரேஸுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி பொதுமக்கள் திடீரென நேற்று சாலை மறியலில் குதித்ததால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. தகவல் அறிந்து வந்த ரோந்து போலீசாரையும் முற்றுகையிட்டு, வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நேற்று இரவு விதிகளைமீறி பைக் ரேஸில் ஈடுபட்டதாக இதுவரை 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சென்னை போலீசார் தெரிவித்துள்ளனர். மேலும் இதுவரை 56 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், பைக் ரேஸில் சிறுவர்கள் ஈடுபட்டு இருந்தால் அவர்களின் பெற்றோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதுபோன்ற விதி மீறல்களை 100 (அ) 90031 30103 என்ற எண்ணுக்கு புகாராக தெரிவிக்கலாம் என்றும் சென்னை மாநகர போலீசார் தெரிவித்துள்ளனர்.

## புகையிலை பொருட்கள் விற்ற பெண் மீது வழக்குப்பதிவு: கடைக்கு சீல்; ரூ.50 ஆயிரம் அபராதம்




திருநெல்வேலி, அக். 5

திருநெல்வேலி மாவட்டம் தேவர்குளம், வன்னிக்கோனேந்தல் பகுதியில் தடை செய்த புகையிலை பொருட்களை விற்பனை செய்த பெண் மீது வழக்குப்பதிவு செய்து, அவரது கடைக்கு சீல் வைத்து ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், ஊரக உட்கோட்டம், தேவர்குளம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட வன்னிகோனேந்தல் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களை விற்பனை செய்தது தொடர்பாக, தேவர்குளம் காவல் நிலையத்தில்(3.10.2026)வழக்குப்பதிவுசெய்யப்பட்டது.

மேற்சொன்ன பெண்ணிடம் இருந்து 28 சிறிய பாக்கெட்டுகள் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மொத்தம் 420 கிராம் மற்றும் ரூ.3,900 ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், இவர் மீது ஏற்கனவேதடைசெய்யப்பட்டபுகையிலை பொருட்களை விற்பனை செய்தது தொடர்பாக தேவர்குளம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து, மானூர் மண்டலம் உணவுபாதுகாப்புத்துறைஅதிகாரிமகாராஜன்என்பவரால், மேற்சொன்ன கடை நேற்று (3.10.2026) மாலை 6 மணிக்கு சீல் வைத்து, ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. அறிவுறுத்தலின்படி மாவட்டம் முழுவதும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களின் விற்பனை மற்றும் பதுக்கலுக்கு எதிராக தொடர்ந்து சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தாமிரபரணி ஆற்றில் கழிவுகள் கலப்பதை தவெக அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்: சவுமியா அன்புமணி

நெல்லை, அக். 5

தாமிரபரணி ஆற்றில் கழிவுகள் கலப்பதை தவெக அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என சவுமியா அன்புமணி கூறியுள்ளார்.

பசுமைத் தாயகம், சென்னை வாழ் நெல்லை மக்கள் நலச்சங்கம்சார்பில்தாமிரபரணியின்நலன்விரும்பிகளுக்கு பாராட்டு விழா மற்றும் விவசாயிகள் சந்திப்பு விழா திருநெல்வேலி அருகே உள்ள கிருஷ்ணாபுரத்தில் இன்று நடைபெற்றது. பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி எம்எல்ஏ சிறப்புரையாற்றினார்.



முன்னதாக, திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற்றுப் பகுதியில் ஆய்வு செய்த சவுமியா அன்புமணி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

ஆளுங்கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் அந்த கோரிக்கையை மற்ற கட்சிகள் ஏற்றுக்கொள்ளாமல் தங்களது கட்சி சார்பில் தனித்தனியாக வேட்பாளர்களை களமிறக்கியது.

இதன்காரணமாகவே இடைத்தேர்தலில் எந்த கட்சிக்கும் ஆதரவு அளிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை பாட்டாளி மக்கள்கட்சி எடுத்தது. குறிப்பாக மதுராந்தகம் தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஆதரவான மக்கள் ஏராளமானோர் உள்ளனர். தாமிரபரணி ஆற்றை பாதுகாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,

தமிழக அரசிடம் தாமிரபரணியை முழுமையாக சுத்தப்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை விரைவில் தாக்கல் செய்ய வலியுறுத்துவோம். ஆற்றில் கழிவுகள் கலப்பதை அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும், தென் தமிழகத்தின் முக்கிய ஜீவநதியான தாமிரபரணியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்க வேண்டும். ரூ.59 கோடி திட்டத்தை முறையாக பயன்படுத்த வேண்டும்

தாமிரபரணி ஆற்றின் அருகில் எந்தவிதமான கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படாது என்ற உறுதியை திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் சமீபத்தில் தெரிவித்துள்ளார். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெர்மன் வங்கி உதவியுடன் கிடைக்கும் ரூ.59 கோடி நிதியை வெறும் கட்டுமானப் பணிகளுக்காக பயன்படுத்தாமல், தாமிரபரணியின் கரையில் உள்ள பழமையான கல் மண்டபங்கள், படித்துறைகள் உள்ளிட்ட பாரம்பரிய சின்னங்களை சீரமைக்கவும், ஆற்றைப் பாதுகாக்கவும் பயன்படுத்த வேண்டும். தென்னகத்தின் காசி என்று அழைக்கப்படும் தாமிரபரணி ஆற்றங்கரை தற்போது மாசடைந்து காணப்படுவது மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகிறது. தாமிரபரணியின் தூய்மை மற்றும் பாரம்பரியத்தை பாதுகாக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் தாமிரபரணி வெறும் ஆறு அல்ல; தென் தமிழகத்தின் வாழ்வாதாரம் மற்றும் பண்பாட்டு அடையாளம். அதை பாதுகாப்பது அனைவரின் கடமை.

இவ்வாறு அவர் கூறினார்.

# வரத்து குறைவால் தக்காளி விலை தொடர்ந்து அதிகரிப்பு..!

சென்னை, அக். 5



சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டுக்கு ஆந்திர மாநிலம் மதனப்பள்ளி, குப்பம், விகோட்டா மற்றும் கர்நாடக மாநிலம் ஒட்டுப்பள்ளி, கோர்லார் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தக்காளி விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

வழக்கமாக தினசரி சுமார் 55 லாரிகள் வரை தக்காளி கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வந்து கொண்டிருந்தன. ஆனால், கடந்த சில நாட்களாக தக்காளியின் வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது. இதன் காரணமாக அதன் விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், இன்று கோயம்பேடு மார்க்கெட்டுக்கு 35 லாரிகளில் மட்டுமே தக்காளி விற்பனைக்கு வந்தது. வரத்து குறைந்ததால் தக்காளி விலை உயர்ந்துள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டில் மொத்த விற்பனையில் ஒரு கிலோ தக்காளி ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே நேரத்தில், வெளி மார்க்கெட்டுகளில் உள்ள காய்கறி கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வறட்சி காரணமாக தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டு வருவதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். வரும் நாட்களில் தக்காளி வரத்து மேலும் குறையும் பட்சத்தில் அதன் விலை மேலும்அதிகரிக்கவாய்ப்புஉள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேபோல், பெரிய வெங்காயத்தின் விலையும் தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்து வருகிறது. கோயம்பேடு மார்க்கெட்டில் ரகத்தை பொறுத்து ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.60 வரை விற்பனை செய்யப்படுகிறது. வெளி மார்க்கெட்டுகளில் உள்ள காய்கறி கடைகளில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.80 வரை விற்பனை ஆகிறது.

சமையலுக்கு அன்றாடம் பயன்படுத்தப்படும் தக்காளி மற்றும் பெரிய வெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் இல்லத்தரசிகள் கவலை அடைந்துள்ளனர். காய்கறிகளின் வரத்து மற்றும் விலையை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வடகிழக்குப் பருவமழை: நுங்கம்பாக்கம் கால்வாயில் தூர்வாரும் பணி: மாநகராட்சி ஆணையாளர் ஆய்வு..!

சென்னை, அக். 5



மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தேனாம்பேட்டை மண்டலம், ரட்லேண்ட்கேட் 2ஆவது தெருவில் உள்ள நுங்கம்பாக்கம் கால்வாயில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இதுதொடர்பாக, சென்னைமாநகராட்சிவெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இன்று (04.10.2026) வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு111க்குட்பட்ட, ரட்லேண்ட்கேட் 2ஆவது தெருவில் உள்ள நுங்கம்பாக்கம் கால்வாயில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பின்னர், மாநகராட்சி ஆணையாளர் செய்தியாளருக்கு அளித்த பேட்டி:

சென்னை மாநகரப் பகுதியில் இருக்கின்ற பல்வேறு பிரதான கால்வாய்கள் தூர்வாரும் திட்டத்தை ஆய்வு செய்துள்ளோம். குறிப்பாக மண்டலம் 9இல் அமைந்துள்ள நுங்கம்பாக்கம் கால்வாய் 1430 மீட்டர் (1.4 கிலோமீட்டர்) நீளமுடையது. இக்கால்வாயானது ஸ்டெர்லிங் சாலையில் தொடங்கி திடீர் நகர் பகுதியில் கூவம் ஆற்றுடன் இணைகிறது.

இப்பகுதியில் உள்ள பல்வேறு பிரதான மழைநீர் வடிகால்களின் நீர் வெளியேற்றும் மையமாக இந்த நுங்கம்பாக்கம் கால்வாய் திகழ்கிறது. இது இயற்கை கால்வாய் அல்ல, மனிதனால் அமைக்கப்பட்ட பூசப்படாத மண் கால்வாயாகும்.

இக்கால்வாயின் ஆரம்பப் புள்ளியிலிருந்து தூர்வாரி, தற்போது 800ஆவது மீட்டரில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மழைநீரைச் சரியாகக் கூவத்தில் கொண்டு சேர்ப்பதற்கான பணிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பாப்கேட் மற்றும் சறுக்கு சக்கர வண்டி ஏற்றும் எந்திரங்கள் மூலமாகத் தூய்மைப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

சென்னை மாநகராட்சியில் இதுபோன்று 60 பாப்கேட் எந்திரங்கள் பல்வேறு மண் கால்வாய்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், 6 நிலம்நீர் ஆகிய பகுதிகளில் அகழ்ந்தெடுத்து வேலை செய்யும் இயந்திரங்கள், ஜே.சி.பி. இயந்திரங்கள், உள்ளிட்ட பல்வகை இயந்திரங்களைப் பயன்படுத்தி, இயற்கை மற்றும் மனிதனால் அமைக்கப்பட்ட 44 கால்வாய்கள், நீர்வள ஆதாரத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 13 கால்வாய்கள் என மொத்தம் 57 கால்வாய்களிலும் தூர்வாருதல், ஆகாயத்தாமரைகளை அகற்றுதல், சிறு பாலங்களின் அடியில் தூர்வாருதல் போன்ற பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இவை மேற்கொள்ளப்படுகின்றன.

நமச்சிவாயபுரம், விருகம்பாக்கம் மற்றும் டிரஸ்ட்புரம் கால்வாய்கள் கூவத்தில் இணையும் இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, டெங்கு ஒழிப்புப் பணிகளும் நடைபெறுகின்றன.

இவ்வருடம் 'சூப்பர் எல் நினோ' ஆண்டாகக் கண்டறியப்பட்டுள்ளதால், பசிபிக் பெருங்கடலில் வெப்பநிலை 3 டிகிரிக்கு மேல் உயர்ந்துள்ளது. இதனால் ஆசியப் பகுதிகளில் புயல்கள் மற்றும் கனமழைக்கான வாய்ப்புகள் அதிகம் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். தென்மேற்குப் பருவமழை 12.5 % குறைவாகப் பெய்திருந்தாலும், வடகிழக்குப் பருவமழை அதை ஈடுசெய்யும் வகையில் அதிகமாகப் பெய்ய வாய்ப்புள்ளது. குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலங்கள் உருவாகி 24 மணி நேரத்திற்குள் தீவிர மழை அல்லது மேகவெடிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதைக் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கைப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

முதல்அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, 15 மண்டலங்களுக்கும் 15 (ஐ.ஏ.எஸ்) அலுவலர்களும், கண்காணிப்பிற்காக 7 அமைச்சர்களும் நியமிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மழைநீர் வடிகால் பணிகளைப் பொறுத்தவரை, கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி யாரது ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. டிமெல்லோஸ் சாலையிலிருந்து பவுடர் மில் சாலை வழியாக காந்தி கால்வாயை அடையும் 500 மீட்டர் நீளத்திலான வெட்டி மூடும் வடிகால் (Cut and Cover Drain) பணி பருவமழைக்கு முன் நிறைவடையும். மாதவரம் ரெட்ஹில்ஸ் சாலையில் உபரி நீர் தேங்குவதைத் தடுக்க 1.2 கிலோமீட்டர் நீளத்திற்கு வெட்டி மூடும் வடிகால் அமைக்கப்பட்டு, மேல் தளம் அமைக்கும் பணி ஒரு வாரத்தில் முடிவடையும்.

உலக வங்கி நிதியுதவி மற்றும் மூலதனப் பணிகள் 99% முடிவடைந்து, தற்போது தூர்வாரும் பணிகள் நடைபெறுகின்றன.

கோவளம் வடிநிலப் பகுதியில் ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் மறுசீரமைப்புத் திட்டம் 2028 வரை செயல்படும் என்பதால், அக்டோபர் 1க்குள் முடிக்கப்பட வேண்டிய முன்னுரிமைப் பணிகள் கண்டறியப்பட்டு நடைபெறுகின்றன. நிலத்தடி பயன்பாட்டுக் குழாய்கள் குறுக்கிடுவதால் சென்னை மெட்ரோ ரெயில், நீர்வள ஆதாரத் துறை, கழிவுநீர் அகற்று வாரியத்துடன் ஒருங்கிணைந்து பணிகள் நடைபெறுகின்றன.

நூக்கம்பாளையம் கால்வாய், சோழிங்கநல்லூர் சந்திப்பு வழியே தெற்கு பக்கிங்காம் கால்வாயை அடையும் திட்டங்கள், துரைப்பாக்கம் திட்டம் மற்றும் ஒக்கியம் மடுவுதூர்வாரும்பணிகள்முழுவீச்சில்நடைபெறுகின்றன. ஒக்கியம் மடுவின் பாலம் கட்டும் பகுதியின் அகலம் 20 மீட்டரிலிருந்து 100 மீட்டராக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மதுரவாயல் துறைமுகம் விரைவுச் சாலைப் பணிக்காகக் கூவத்தில் அமைக்கப்பட்ட தற்காலிகக் கரைகள் மற்றும் பாறைகளை அகற்றும் பணியைத் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

சென்னையில் 109 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. செப்டம்பரில் நாளொன்றுக்கு 80 முதல் 100 ஆக இருந்த டெங்கு பாதிப்பு தற்போது 39 ஆகக் குறைந்துள்ளது.

காய்ச்சல், சளி, இருமல் மற்றும் அடினோ வைரஸ் பாதிப்புகளுக்காகவும் பொதுமக்கள் முகாம்களை அணுகுவதால் முகாம்களின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை.

பாதிப்பு அதிகம் உள்ளதாகக் கண்டறியப்பட்ட 500 இடங்களில் தீவிரத் தூய்மைப் பணிகளும், கொசுப் புழுக்களை அழிக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மிகக்கடுமையான மழை பெய்யும்போது வடிகால்களின் கொள்ளளவு வரம்பைக் கடந்து நீர்தேங்க வாய்ப்புள்ளதால், தாழ்வான 219 பகுதிகள் கண்டறியப்பட்டு நிவாரண முகாம்கள், 111 பொதுச் சமையலறைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களிடமிருந்தும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பெறப்படும் புகார்களுக்கு 24 முதல் 48 மணி நேரத்திற்குள் தீர்வு காணத் தனிக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராமநாதபுரம் அருகே சோகம்: அரசு பேருந்து மீது பைக் மோதி விபத்து 2 பேர் பலி..!

ராமநாதபுரம், அக். 5

விடுமுறையை முன்னிட்டு சொந்த ஊருக்கு வந்த கல்லூரி மாணவர்கள் 2 பேர் சாலை விபத்தில் உயிரிழந்த சம்பவம் ராமநாதபுரம் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



ராமநாதபுரம் சின்னக்கடை பகுதியை சேர்ந்தவர்கள் முகமது அர்ஷத் (19), முகமது பகத் (18), முகமது ஹசன் (19). நெருங்கிய நண்பர்களான இவர்கள் 3 பேரும் சென்னை, மதுரை ஆகிய ஊர்களில் உள்ள கல்லூரிகளில் படித்து வருகின்றனர். இதற்காக அவர்கள் அங்குள்ள விடுதிகளில் தங்கி படித்து வருகின்றனர்.

தற்போது தொடர் விடுமுறை நாட்கள் என்பதால் 3 பேரும் சொந்த ஊரான ராமநாதபுரத்திற்கு வந்திருந்தனர். அப்போது பல்வேறு இடங்களுக்கு நண்பர்களாக சேர்ந்து சென்று வந்துள்ளனர்.

இந்த நிலையில், நேற்று இரவு 3 பேரும் பைக்கில் ராமநாதபுரத்தில் இருந்து தேவிபட்டினம் நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

புல்லங்குடி அருகே சென்றபோது, எதிர்பாராதவிதமாக அதிக வேகத்தில் சென்ற பைக் முன்னால் சென்று கொண்டிருந்த அரசு பேருந்தின் மீது பயங்கரமாக மோதியது.

மோதிய வேகத்தில் பைக்கில் சென்ற 3 பேரும் நிலைதடுமாறி சாலையில் கீழே விழுந்தனர். அப்போது அவர்கள் மீது அரசு பேருந்தின் பின்சக்கரம் ஏறி இறங்கியது.

இந்த கோர விபத்தில் முகமது ஹசன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த முகமது அர்ஷத் மற்றும் முகமது பகத் ஆகிய இருவரும் மீட்கப்பட்டு ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதில் முகமது பகத்தின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்ததால் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

நண்பர்களாக ஒன்றாக சென்ற 3 பேரில் 2 பேர் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் அவர்களது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விபத்து குறித்து தேவிபட்டினம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்துக்கான காரணம், பைக் சென்ற வேகம் உள்ளிட்டவை குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தூத்துக்குடி: இன்ஸ்டாகிராமில் கத்தி, அரிவாளுடன் ரீல்ஸ் வெளியிட்ட சிறுவன் கைது

தூத்துக்குடி, அக். 5

தூத்துக்குடியில் கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களுடன் இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் வீடியோ வெளியிட்டு பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் செயல்பட்ட சிறுவனை போலீசார் கைது செய்தனர்.




தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரி செல்வராஜபுரத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள், கத்தி மற்றும் அரிவாள் உள்ளிட்ட ஆபத்தான ஆயுதங்களை கையில் ஏந்திக் கொண்டு பொதுமக்களை மிரட்டும் வகையில் இன்ஸ்டாகிராம் சமூக வலைதளப் பக்கத்தில் ரீல்ஸ் வீடியோவைப் பதிவிட்டுள்ளதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இந்த தகவலின் அடிப்படையில், ஆறுமுகநேரி காவல் நிலைய சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் தாமஸ் தீவிர விசாரணை மேற்கொண்டார். விசாரணையில் அதில் தொடர்புடைய 16 வயது சிறுவனை போலீசார் கைது செய்தனர். இச்சம்பவத்தில் தொடர்புடைய மற்றொரு சிறுவனை போலீசார் தீவிரமாக வலைவீசி தேடி வருகின்றனர்.

இதுகுறித்து ஆறுமுகநேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர். சமூக வலைதளங்களில் இதுபோன்ற ஆபத்தான மற்றும் சட்டம் ஒழுங்கிற்கு பாதகமான வீடியோக்களைப் பதிவிடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் துறை தரப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பெண் குழந்தைகளின் திறமையை கண்டறிந்து ஊக்குவிக்க வேண்டும்: ஆசிய தடகளத்தில் பதக்கம் வென்ற அபிநயா பேட்டி

தூத்துக்குடி, அக்.5



அனைத்து பெற்றோரும் தங்களது குழந்தைகளின் திறமையை கண்டறிந்து சாதனையாளர்களாக மாற்ற ஊக்குவிக்க வேண்டும் என்று ஆசிய தடகளத்தில் பதக்கம் வென்ற அபிநயா தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்த தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை அபிநயாவுக்கு தூத்துக்குடி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகேயுள்ள கல்லூத்து கிராமத்தைச் சேர்ந்த அபிநயா, தற்போது சென்னை எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரியில் பி.ஏ. இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். சாதனைக்குப் பின் சென்னையிலிருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வாகைகுளம் விமான நிலையம் வந்தடைந்த அவருக்கு, அவரது தந்தை ராஜராஜன், விமான நிலைய அதிகாரிகள், கிராம மக்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் மாலை மற்றும் சால்வை அணிவித்து வரவேற்பு அளித்தனர்.

வரவேற்பிற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய வீராங்கனை அபிநயா கூறியதாவது: எனது இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த குடும்பத்தினர் மற்றும் பயிற்சியாளர்கள் அனைவருக்கும் நன்றி. தமிழக அரசு சார்பில் ரூ.30 லட்சம் ஊக்கத்தொகையும், 'எலைட் ஸ்கீம்' பயிற்சிக்காக ரூ.30 லட்சமும் வழங்கி ஊக்குவித்த தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுன் மற்றும் தமிழக முதல்அமைச்சர் விஜய் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பல தோல்விகளை சந்தித்த எனக்கு, தற்போதைய வெற்றி மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்தகட்டமாக ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்று தமிழகத்திற்கும் இந்தியாவுக்கும் பெருமை சேர்ப்பதே எனது முதன்மை லட்சியம். இன்றளவும் பல இடங்களில் பெண் குழந்தைகளை விளையாட்டு மற்றும் உயர்கல்வியில் ஈடுபடுத்தாமல் சிறு வயதிலேயே திருமணம் செய்து வைக்கும் நிலை உள்ளது. இந்த நிலை மாற வேண்டும். பெற்றோர்கள் பெண் குழந்தைகளை விளையாட்டில் ஈடுபடுத்த முன்வர வேண்டும்.

நான் இதுவரை 13 நாடுகளுக்கு பயணம் செய்துள்ளேன். அந்த அளவுக்கு துணிச்சலுடன் செயல்பட எனது குடும்பத்தினர் அளித்த ஊக்கமே காரணம். எனவே அனைத்து பெற்றோரும் தங்களது குழந்தைகளின் திறமையை கண்டறிந்து சாதனையாளர்களாக மாற்ற ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பின்னர் தனது சொந்த ஊரான ஆலங்குளத்திற்கு சென்ற அவருக்கு, வியாபாரிகள் சங்கம், அரிமா சங்கம், மனவளக்கலை மன்றம் மற்றும் காமராஜர் வெண்கலச் சிலை பராமரிப்புக் கமிட்டி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சார்பில் மேளதாளத்துடன் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

# சாலையில் பைக் நிலைதடுமாறி விழுந்த விபத்தில் முதியவர் உயிரிழப்பு

தூத்துக்குடி, அக். 5

தூத்துக்குடி மாவட்டம், சொக்கன்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த ஒரு முதியவர், குடும்ப பிரச்சினை காரணமாக கடந்த 5 ஆண்டுகளாக குடும்பத்தை விட்டு பிரிந்து வாழ்ந்து வந்தார்.

தூத்துக்குடி மாவட்டம், சொக்கன்குடியிருப்பு மெயின் ரோட்டைச் சேர்ந்த அருளானந்தம் மகன் ஜேசுமரியான் (வயது 65). இவருக்கு மனைவியும் 3 மகன்களும், 3 மகள்களும் உள்ளனர். குடும்ப பிரச்சினை காரணமாக கடந்த 5 ஆண்டுகளாக குடும்பத்தை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார். இவர் சின்னராணியபுரத்தை சேர்ந்த செல்வி என்பவர் வீட்டில் தங்கியிருந்து நடுவக்குறிச்சியில் உள்ள தோட்டத்தை பராமரித்து வந்துள்ளார்.

இந்தநிலையில் நேற்று அதிகாலையில் மழை பெய்ததால் தோட்டத்தில் உள்ள மாடு நனையாமல் இருப்பதற்காக வீட்டிலிருந்து தார்ப்பாய் எடுத்துக்கொண்டு தனது பைக்கில் சென்றுள்ளார். தட்டார்மங்கலம் பழைய டாஸ்மாக் கடை எதிரே வந்த போது சாலையில் பைக் நிலைதடுமாறி கீழே விழுந்து விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அப்பகுதியினர் அளித்த தகவலின் பேரில் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் பரிசோதனை செய்தபோது, அவர் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து தட்டார்மடம் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# திருத்தணி முருகன் கோவிலில் சிலை விழுந்து 4 பக்தர்கள் காயம்

சென்னை,

முருகபெருமானின் 5ம் படைவீடான திருத்தணி முருகன் கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து மூலவரை தரிசித்து செல்கின்றனர். வார விடுமுறை தினம் என்பதால் இன்று கூட்டம் அலைமோதுகிறது.

இந்தநிலையில், இன்று காலை பக்தர்கள் பொது வழியில் சாமி தரிசனம் செய்ய கோவில் உள்பிரகாரத்தில் உள்ள கோபுர வாசலில் நின்றிருந்த பக்தர்கள் தலையில் சுண்ணாம்பு சிலை கற்கள் விழுந்து 3 பெண்கள் உட்பட 4 பேர் படுகாயம் ஏற்பட்டது. திருத்தணி மாவட்ட அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கோபுரத்தின் மீது அமர்ந்திருந்த குரங்கு யாழி சிலையை பிடித்து ஆட்டியதில் சிலை உடைந்து கற்கள் பக்தர்கள் மீது விழுந்துள்ளதாக கூறப்படுகிறது. உடனடியாக உதவிக்கு கோவில் நிர்வாகம் வரவில்லை என பக்தர்கள் புகார் அளித்துள்ளனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

05.10.2026

# தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் மாபெறும் தூய்மைப்பணியாளர்கள் நல முகாம்




தேனி மாவட்டம் உத்தம பாளையத்தில் உதிதமபாளையம், அனுமந்தன் பட்டி, வீரபாண்டி, குச்சனூர், பன்னைப்புரம் ஆகிய பேருர்ராட்சிகளில் பணி செய்து வரும் தூய்மைப்பணியாளர்களுக்கான மாபெறும் நலமுகாம் நடைபெற்றன. இந்த முகாமில் 100க்கும் மேற்பட்ட தூய்மைப்பணியாளர்கலந்துகொண்டனர்.

இதில் கலந்து கொண்டவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள், அரசு திட்டடங்கள் பதிவு உதவி, PPE கிட்டுகள் வழங்கப்பட்டன,அடையாளஅட்டைகள், விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த முகாமை உத்தமபாளையம் பேருர்ராட்சி நிர்வாகம் ஏற்பாடு செய்து

இருந்தனர் உத்தமபாளையம் பேருர்ராட்சி செயல் அலுவலர், அனுமந்தன் பட்டி பேருர்ராட்சி செயல் அலுவலர் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு குறித்த ஆலோசனைகள் வழங்கினார்கள்.



முதலமைச்சர், சென்னை கோயம்பேடு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத் துறையின் சார்பில் வெற்றிப் பயணம் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சிப் பேருந்து நிலையத்தில் வெற்றிப் பயணம் திட்டத்தின் கீழ் பேருந்து சேவையை மாவட்ட கலெக்டர் ந.மிருணாளினி துவக்கி வைத்து, பேருந்தில் பயணம் செய்த மகளிருக்கு பேருந்து பயண சீட்டினை வழங்கினார்.

# திருப்பூரில் பரபரப்பு: பல கோடி மதிப்புள்ள அரசு நிலம் மீட்பு - 4வது முறையாக வைக்கப்பட்ட அறிவிப்பு பலகை




திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நெருப்பெரிச்சல் பகுதியில், சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பல கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நிலத்தை அதிகாரிகள் அதிரடியாக மீட்டெடுத்துள்ளனர்.

திருப்பூர் வடக்கு வட்டம், நெருப்பெரிச்சல் கிராமம், க.ச.எண். 566ல் உள்ள இட்டேரி புறம்போக்கு நிலத்தில் (சுமார் 0.16.40 பரப்பளவு), 'கொங்கு மஹால்' என்ற திருமண மண்டபம் எவ்வித முறையான அனுமதியோ அல்லது பாதுகாப்பு சான்றிதழ்களோ இன்றி சட்டவிரோதமாகக் கட்டப்பட்டு இயங்கி வந்தது

பொதுமக்களிடம் முறையற்ற வகையில் கட்டணம் வசூலித்து வந்த இந்த மண்டபத்தை பூட்டி சீல் வைக்கவும், ஆக்கிரமிப்பை அகற்றவும் கோரி திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கத் தலைவர் மற்றும் சமூக ஆர்வலர் ஈ.பி.அ.சரவணன் தொடர்ந்து போராடி வந்தார்.

அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கை:

மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி, திருப்பூர் வடக்கு வட்டாட்சியர்அவர்களின்மேற்பார்வையில்,நிலவருவாய் ஆய்வாளர்மற்றும்அதிகாரிகள்சம்பந்தப்பட்ட இடத்திற்கு நேரடியாகச் சென்று அளவீடு செய்தனர். அது அரசுக்குச் சொந்தமானஇடம்என்பதைஉறுதிசெய்து,ஆக்கிரமிப்பை அகற்ற நோட்டீஸ் வழங்கினர்.

மேலும், கடந்த 2025 மே, டிசம்பர் , மற்றும் பிப்ரவரி 5, 2026 அன்று மண்டப சுவற்றில் அரசுக்கு சொந்தமான நிலம் என்ற அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டது.

தொடரும் மோதல் – 4வது முறையாகப் பலகை:

இருப்பினும், வருவாய்த்துறையினர் வைத்த அறிவிப்பு பலகையைச் சில நபர்கள் சட்டவிரோதமாக அகற்றியுள்ளனர். இதுகுறித்து திருமுருகன்பூண்டி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், வருவாய்த்துறையினர் மற்றும் நெருப்பெரிச்சல்கிராமநிர்வாகஅலுவலர்(VAO)உள்ளிட்ட அதிகாரிகள்மீண்டும்அந்த இடத்திற்குச்சென்று,தற்போது நான்காவது முறையாக "அரசுக்குச் சொந்தமான இடம்" என்றஅறிவிப்புப்பலகையைஅதிரடியாகநிறுவியுள்ளனர்.

தொடர் முயற்சிகள் மற்றும் 157,, புகார்களுக்குப் பிறகு, ஆக்கிரமிப்பில் இருந்த கொங்கு மஹாலின் வர்த்தக மின்சார இணைப்பும் மின்வாரியத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது. பல கோடி மதிப்புள்ள அரசு நிலத்தை மீட்ட அதிகாரிகளின் இந்த அதிரடி நடவடிக்கை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (05.10.2026)

**மேஷம்** பணிகளில் வேகம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஆதரவு கிடைக்கும்.

**ரிஷபம்** பொருளாதார விஷயங்களில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். உடல் மற்றும் மன ஓய்வுக்கு நேரம் ஒதுக்குங்கள்.

**மிதுனம்** நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களால் நல்ல வாய்ப்புகள் வரலாம். முக்கிய பேச்சுவார்த்தைகளில் பொறுமை கைகொடுக்கும்.

**கடகம்** குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கலாம். பழைய பிரச்சினைக்கு தீர்வு காணும் வாய்ப்பு உள்ளது. செலவுகளில் கட்டுப்பாடு நல்லது.

**சிம்மம்** உங்கள் திறமையை வெளிப்படுத்தும் சூழல் அமையும். வேலை தொடர்பான பாராட்டு கிடைக்கலாம். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும். பண விஷயங்களில் தெளிவான முடிவுகள் எடுக்கலாம். உறவுகளில் இனிமையான மாற்றம் ஏற்படலாம்.

**துலாம்** புதிய தொடர்புகள் பயனுள்ளதாக அமையலாம். தொழில் அல்லது வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டிய நாள். செலவுகளை கண்காணிக்கவும்.

**விருச்சிகம்** தடைப்பட்டிருந்த காரியம் மீண்டும் தொடங்கலாம். பணவரவு தொடர்பான நம்பிக்கை ஏற்படும். உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளைத் தவிர்க்கவும்.

**தனுசு** பயணம் அல்லது வெளியிடத் தொடர்பான வேலைகள் அமையலாம். கற்றல் மற்றும் புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்** பொறுப்புகள் அதிகரித்தாலும் அவற்றைதிறம்படசமாளிக்கமுடியும். பணியில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு கிடைக்கலாம். உடல்நலத்தில் கவனம் தேவை.

**கும்பம்** புதிய சிந்தனைகள் செயல்படுத்த ஏற்ற நாள். நண்பர்கள் மூலம் ஆதரவு கிடைக்கலாம். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் அவசியம்.

**மீனம்** மனதில் இருந்த குழப்பங்கள் குறையலாம். குடும்ப உறவுகளில் நெருக்கம் அதிகரிக்கும். நீண்டநாள் எதிர்பார்த்த செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

# பள்ளி காலாண்டு விடுமுறையை மற்றும் ஞாயிற்றுக்கிழமை முன்னிட்டு பெரியகுளம் கும்பக்கரை அருவியில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

பள்ளி காலாண்டு விடுமுறையை மற்றும் ஞாயிற்றுக்கிழமை முன்னிட்டு பெரியகுளம் கும்பக்கரை அருவியில் குவிந்த சுற்றுலாப் பயணிகள் அருவியில் நீர்வீழ்ச்சியில் பொதுமக்கள் குடும்பம் குடும்பமாக சென்று குளித்து மகிழ்கின்றனர்

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இயற்கை எழில்மிகு சூழலில் கும்பக்கரை அருவி அமைந்துள்ளது.

இந்தக் கும்பக்கரை அருவிக்கு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளான வெள்ளகெவி, வட்டக்கானல் உள்ளிட்ட நீர் பிடிப்பு பகுதிகளின் மூலம் அருவிக்கு நீர் வரத்து வருகிறது,

அருவியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வெயிலின் தாக்கம் காரணமாக மேற்படிப்பு பகுதியில் மழையின் காரணமாக கும்பக்கரை அருவிக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் பள்ளிகளுக்கு காலாண்டு விடுமுறை மற்றும் வார இறுதி நாளான இன்று தமிழகத்திலிருந்து பல்வேறு மாவட்டங்களில் ஏராளமான பொதுமக்கள் தங்களது குழந்தைகளை அழைத்து வந்து குடும்பத்துடன் கும்பக்கரை அருவியில் குளித்து காலை முதலே குளித்து சுற்றுலாப் பயணிகள் மகிழ்கின்றனர்.

வெயிலின் தாக்கம் காரணமாக ஆர்ப்பரிச்சு கொட்டும் அருவியில் சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் அளவில் தண்ணீர் மட்டும் வருவதால் சொல்லியாச்சு குதூகலமாய் குளித்து மகிழ்ச்சி அடைகின்றனர்

கும்பக்கரை அருவியில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அருவியில் குளித்து கொண்டாடினர்

# சீனா ஓபன் டென்னிஸ்: ஒசாகா, மிர்ரா ஆண்ட்ரீவா அசத்தல்... 4வது சுற்றுக்கு முன்னேற்றம்



சா"னா ஓபன் டென்னிஸ் தொடரில் 4வது சுற்றுக்கு மிர்ரா ஆண்ட்ரீவா, நவோமி ஒசாகா முன்னேறியுள்ளனர்.

சீனா ஓபன் டென்னிஸ் தொடர் சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீராங்கனைகள் அடுத்தடுத்த சுற்றுகளுக்கு முன்னேறி வருகின்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு 3வது சுற்றில் ஜப்பானின் நவோமி ஒசாகா, செக் குடியரசின் சாரா பெஜ்லெக்கை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஒசாகா, 76 (74), 64 என்ற நேர் செட்களில் சாரா பெஜ்லெக்கை வீழ்த்தினார்.

இதன் மூலம் நவோமி ஒசாகா சீனா ஓபன் தொடரின் 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு 3வது சுற்று ஆட்டத்தில் ரஷியாவின் மிர்ரா ஆண்ட்ரீவா, உஸ்பெகிஸ்தானின் பொலினா குடர்மெடோவாவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆண்ட்ரீவா, 64, 61 என்ற நேர் செட்களில் பொலினா குடர்மெடோவாவை வீழ்த்தினார்.

இதன் மூலம் மிர்ரா ஆண்ட்ரீவாவும் 4வது சுற்றுக்கு தகுதி பெற்றார்

# பாகிஸ்தானில் முத்தரப்பு ஒருநாள் தொடர்... 16 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிப்பு



2027ம் ஆண்டு ஐசிசி ஆடவர் ஒருநாள் உலகக்கோப்பை தொடருக்கு தயாராகும் வகையில், பாகிஸ்தானில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் தொடருக்கான 16 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணிக்கு குசால் மெண்டிஸ் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடக்க ஆட்டக்காரர் பதும் நிஸ்ஸங்காவும் 16பேர்கொண்டஅணியில்சேர்க்கப்பட்டுள்ளார். இருப்பினும், அவரது பயணம் மருத்துவப் பரிசோதனையின் முடிவைப் பொறுத்தே அமையும்.

அவர் முழு உடற்தகுதியை எட்டினால் மட்டுமே அணியுடன் பாகிஸ்தானுக்கு பயணம் செய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் தொடக்க மற்றும் டாப் ஆர்டர் வரிசையில் அவிஷ்கா பெர்னாண்டோ, கமில் மிஷாரா, பவன் ரத்நாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மிடில்ஆர்டரில் சஹான் ஆராச்சிகே, கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

முன்னாள் கேப்டன் தசுன் ஷானகா மற்றும் சுழற்பந்து வீச்சு ஆல்ரவுண்டர் துனித் வெல்லாலகே ஆகியோரும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

சுழற்பந்து வீச்சு பிரிவில் மகீஷ் தீக்சனா மற்றும் சச்சிந்து கொலம்பகே ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

வேகப்பந்து வீச்சில் துஷ்மந்த சமீரா, அசிதா பெர்னாண்டோ, டில்ஷான் மதுஷங்கா, ஈஷான் மலிங்கா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் முடிவடைந்ததும், இலங்கை அணி முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து ஆகிய 3 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடர் அக்டோபர் 18ம் தேதி தொடங்குகிறது.

2027ம் ஆண்டு ஒருநாள் உலகக்கோப்பைக்கு தயாராகி வரும் நிலையில், இந்தத் தொடர் இலங்கை அணிக்கு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

குசால் மெண்டிஸ் (கேப்டன்), சஹான் ஆராச்சிகே, துஷ்மந்த சமீரா, சச்சிந்து கொலம்பகே, அவிஷ்கா பெர்னாண்டோ, அசிதா பெர்னாண்டோ, ஜனித் லியனகே, டில்ஷான் மதுஷங்கா, ஈஷான் மலிங்கா, கமிந்து மெண்டிஸ், கமில் மிஷாரா, பதும் நிஸ்ஸங்கா, பவன் ரத்நாயக்க, தசுன் ஷானகா, மகீஷ் தீக்சனா, துனித் வெல்லாலகே.

# விஜய் சேதுபதிக்காக நீண்ட நாள் காத்திருந்தேன் மாளவிகா மோகனன்



கதாநாயகனாக தியாகராஜன் குமாரராஜாவின் இயக்கத்தில் உருவாகும் 'பாக்கெட் நாவல்' படத்தில் மாளவிகா மோகனன் கதாநாயகியாக நடிக்கிறார் சமீபத்தில், அப்படத்தில் பணியாற்றிய தனது அனுபவம் குறித்தும் நாயகன் விஜய் சேதுபதி குறித்தும் மாளவிகா மோகனன்தனதுஇன்ஸ்டாகிராமில்பதிவிட்டுள்ளதாவது:

சில படங்கள். அவற்றை உருவாக்கும்போதே தங்களுக்குள் ஒரு சிறிய உலகமாக மாறிவிடுகின்றன. இந்தப் படத்தில் ஒரு பகுதியாக இருந்ததை நான் நம்பமுடியாத அளவிற்கு அதிர்ஷ்டமாக உணர்கிறேன். படங்களைப் போலவே உடன் பணியாற்றுபவர்களும் முக்கியமானவர்கள் என்பதை அந்த அனுபவம் எனக்குக் கற்றுக்கொடுத்தது.

விஜய்சேதுபதி மிகவும் அக்கறையும் தாராள குணமும் கொண்ட சக நடிகராக இருந்தார். அதற்கு நன்றி. விஜய் சேதுபதியுடன் இந்தப் பயணத்தில் பயணித்த பிறகு, வேறு யாருடனும் இந்த அனுபவத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்க முடியும் என்று என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. எவ்வளவு காலம் எடுத்தாலும் அல்லது எவ்வளவு கடினமாக இருந்தாலும், விஜய்சேதுபதி மிகவும் ஊக்கமளிப்பவராகவும், இளிமையானவராகவும் இருந்து, நான் ஆராய்ந்து அதைச் சரியாகச் செய்வதற்கு எப்போதும் ஒரு வசதியான சூழலை உருவாக்கிக் கொடுத்தார்.

இதற்கு முன்பு இருவரும். பேட்ட' மற்றும் 'மாஸ்டர் படங்களில் நடித்திருந்தாலும், அந்தப் படங்களில் ஒருபோதும் இணைந்து நடித்ததில்லை அதனால், இந்தப் படம் நீண்ட நாட்களாகக் காத்திருந்த ஒன்று. மேலும், இது எவ்வளவு அழகான ஒன்றாக அமைந்திருக்கிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மகாபாரத கர்ணனாக நடிக்கும் ராகவா லாரன்ஸ்!




பென் மூவீஸ் (PEN MOVIES ) ஜெயந்திலால் கடா வழங்க (JAY ANTILALGADAPRESENTS), ஆர்வி ஸ்டூடியோஸ் ஸ்ரீ நீலாத்ரி புரொடக்ஷன்ஸ் (RV STUDIOS & SRI NEELADRI PRODUCTIONS) இணைந்து இப்படத்தை பிரம்மாண்டமாகத் தயாரிக்கிறது. கர்ணனின் காவியத்தை இந்தியத் திரைகளில்உயிர்ப்பெறச்செய்ய வருகிறது 'மஹாவீர் கர்ணா'.

மகாபாரத இதிகாச நாயகர்களில் ஒருவரானமஹாவீர் கர்ணன் கதாபாத்திரத்தில் ராகவா லாரன்ஸ் நடிக்க ரமேஷ் வர்மா (RAMESH VARMA) பிரம்மாண்ட திரை அனுபவத்தை காட்சிப்படுத்த இருக்கிறார். ரூ.150கோடி பொருட்செலவில் தயாராகவுள்ள இந்தப் படத்தை தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி மற்றும் கன்னடத்தில் ஒரே நேரத்தில் படமாக்குகின்றனர்.

இத்திரைப்படத்துக்காக பிரம்மாண்டமான சிறப்பு அரங்குகள், புராண காலத்தை கண்முன் நிறுத்தும்கலைவடிவமைப்புகள், அசரவைக்கும் போர்க்காட்சிகள் மற்றும் உலகத்தர VFX தொழில்நுட்பம் என அனைத்தும் சேர்ந்து, மொத்தத்தில் ஒரு பிரமிக்க வைக்கும்காட்சி விருந்தாக இப்படம் உருவாக்கப்பட இருக்கிறது.

கௌரவம், விசுவாசம், தியாகம் தான் கர்ணனின் விதியை நிர்ணயித்தன. அந்த மாவீரனின் கதையை உணர்வுபூர்வமாகவும், பிரம்மாண்டமாகவும் சொல்லவிருக்கிறார் இயக்குநர் ரமேஷ் வர்மா. படத்தின் மற்ற நட்சத்திரங்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்த அறிவிப்புகள் ஒவ்வொன்றாக வெளியாக உள்ளன.

'மஹாவீர் கர்ணா' மூலம் கர்ணனின் உலகம் உங்கள் கண் முன்னால் விரியவிருக்கிறது. மஹாவீர் கர்ணனாக ராகவா லாரன்ஸ் அதை செய்துகாட்டுவார்.

அவர் புகழைத் தாங்கிவரும் 'மஹாவீர் கர்ணா' உலகெங்கும் 2027ல் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடத்தில் வெளியாகும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.